


We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)

## செப்டம்பர் - 2019

*We Are Here..!! To Guide You..!!*



# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## செப்டம்பர் - 17.09.2019

We Shine Academy™
guiding you to get through

Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- தேசிய நிகழ்வுகள்
- சர்வதேச நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- அறிவியல் நிகழ்வுகள்











## தேசிய நிகழ்வுகள்

- **பயணிகளுக்கு பல்வேறு வசதிகளை ஏற்படுத்தும் வகையில், முதல் கட்டமாக, தில்லி – லக்னோ இடையே தனியார் ரயில் சேவை வரும் அக்டோபர் மாதம் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.** இதன் சோதனை ஓட்டம் தற்போது தீவிரமாக நடைபெற்று வருகிறது. இதைத்தொடர்ந்து, மும்பை – அகமதாபாத் இடையே தனியார் ரயில் டிசம்பரில் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், தென் மாநிலங்களில் தனியார் ரயில்களை இயக்குவது குறித்தும் ஐ.ஆர்.சி.டி.சி. ஆய்வு பணிகளைத் தீவிரப்படுத்தியுள்ளது.

- நாட்டில் இருந்து தகவல் தொழில்நுட்ப சேவைகளின் ஏற்றுமதியை அதிகரிக்கும் வகையில், **'இந்தியா சாப்ட்' என்னும் சர்வதேச கண்காட்சி மற்றும் மாநாடு ஹைதராபாத்தில் அடுத்த ஆண்டு மார்ச் 3, 4 ஆகிய தேதிகளில் நடைபெறவுள்ளது.**

## சர்வதேச நிகழ்வுகள்

- **அமெரிக்காவின் ஹூஸ்டன் நகரில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்கும் 'மோடி நலமா' (ஹௌடி மோடி) நிகழ்ச்சியில், அந்நாட்டு அதிபர் டொனால்ட் டிரம்ப்பும் இணையவிருப்பதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.**
  - ஹூஸ்டன் நகரில் இந்திய – அமெரிக்கர்கள் மத்தியில் 22ம் தேதி உரையாற்றவுள்ளார். 'மோடி நலமா' என்று பெயரிடப்பட்டுள்ள இந்நிகழ்ச்சி, ஹூஸ்டனின் என் ஆர்.ஜி அரங்கில் மிகப் பிரம்மாண்டமாக நடைபெற உள்ளது.

- **இந்தியா, சிங்கப்பூர், தாய்லாந்து நாடுகளின் கடற்படை பங்கேற்கும் முத்தரப்பு கூட்டுப் பயிற்சி திங்கள்கிழமை தொடங்கியது.** இம்மூன்று நாடுகளும் இத்தகைய முத்தரப்பு பயிற்சியில்

பங்கேற்பது இது முதல் முறையாகும்.

- முத்தரப்பு கடற்படையின் கூட்டுப் பயிற்சி, அந்தமான் - நிகோபர் தீவுகளில் உள்ள போர்ட் பிளேர் நகரில் திங்கள்கிழமை தொடங்கியது. இந்தப் பயிற்சி, கடற்பகுதி, கரைப்பகுதி என இரு கட்டங்களாக நடைபெறுகிறது.
- கடற்பகுதி பயிற்சி செப். 18 முதல் 20 ஆம் தேதி வரை நடைபெறும்.

- உடற்பயிற்சி MAITREE இந்திய ராணுவம் (IA) மற்றும் ராயல் தாய்லாந்து இராணுவம் (RTA) ஆகியவற்றுக்கு இடையேயான வருடாந்திர இருதரப்பு கூட்டுப் பயிற்சி இன்று மேகாலயாவின் உம்ரோய், வெளிநாட்டு பயிற்சி முனை (FIN) இல் தொடங்கியது. பயிற்சியின் நோக்கம் **காட்டில் நிலப்பரப்பு மற்றும் நகர்ப்புற சூழ்நிலைகளில் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் கூட்டு பயிற்சி** அளிப்பதாகும். **2006 முதல் இந்தியாவிற்கும் தாய்லாந்திற்கும் இடையிலான நீண்டகால இருதரப்பு உறவுகளின் முகாமாக MAITREE – 2019 உடற்பயிற்சி உள்ளது.**

## விளையாட்டு நிகழ்வுகள்

- **ஐசிசி டெஸ்ட் பேட்டிங் தரவரிசையில் ஸ்மித் முதலிடத்தில் நீடிக்கிறார். இந்திய கேப்டன் விராட் கோலி இரண்டாம் இடத்தில் உள்ளார்.**
    - பேட்ஸ்மேன் தரவரிசையில் ஆஸி.வீரர் ஸ்டீவ் ஸ்மித் 937 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார். ஓராண்டுக்கு மேலாக முதலிடத்தில் இருந்த கோலி 903 புள்ளியுடன் இரண்டாம் இடத்தில் உள்ளார்.

## அறிவியல் நிகழ்வுகள்

- **வரும் 2022ம் ஆண்டில் விண்வெளிக்கு மனிதர்களை அனுப்ப பாகிஸ்தான் திட்டமிட்டுள்ளது.**
    - பாகிஸ்தான் தனது முதல் விண்வெளி வீரரை வரும் 2022

ஆம் ஆண்டு விண்வெளிக்கு அனுப்ப திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தில் சீனாவுடன் இணைந்து பாகிஸ்தான் பணியாற்ற உள்ளது. இத்திட்டத்துக்கான விண்வெளி வீரர்கள் தேர்வு வரும் 2020- ஆம் ஆண்டில் தொடங்கும் என்று அந்நாட்டின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சர் சௌதரி ஃபாவாத் ஹூசைன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

We Shine Academy™